ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1896/28 - 2015 ජනවාරි මස 10 වැනි සෙනසුරාදා - 2015.01.10

*1896/28 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் பந்தி (1) (அ) என்பதன் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையையும் அமைச்சுக்களின் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குரிய விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றைச் சாட்டுதல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்,

பல்வேறு அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன இதன்கண் காணப்படும் திகதியிலிருந்து, கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பெற்றவாறு அமைந்துள்ளன என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் எவருக்கும் குறித்தொதுக்கப்பெறாத விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் யாவும் சனாதிபதி என்ற வகையில் தொடர்ந்தும் எனது பொறுப்பிலேயே இருக்கும்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2015, சனவரி 10.

**அட்டவணை**

*1. பாதுகாப்பு அமைச்சர்*

| நிரல் I<br><br>கடமைகளும்<br>பணிகளும் | நிரல் II<br><br>திணைக்களங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br><br>நடைமுறைப்படுத்துப்படவேண்டிய<br>சட்டங்கள் |
|---|---|---|
| 1. அரச பாதுகாப்பு, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், பிரசாவுரிமை தொடர்பிலான விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் நோக்கெல்லையின் கீழ்வரும் விடயங்களுடனும் தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br><br>2. குறித்த நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால எல்லையினுள்ளும் வரவு, செலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்துதலும் செயலாட்சி செய்தலும்<br><br>3. அமைச்சின் நோக்கெல்லையின் கீழ்வரும் சகல பொதுச் சேவைகளையும் வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமானதாகவும் வழங்குதல்<br><br>4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி அமைச்சின் செயற்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தத் தேவையான நவீன முகாமைத்துவ நுட்பமுறைகளையும் தொழில்நுட்பத்தையும் கையாண்டு வினைத்திறனுடன் பணியாற்றும் வகையில் சகல முறைமைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல்<br><br>5. பாதுகாப்புச் சேவைகளின் கடமைகளை இலகுவாக்குவதன் மூலம் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்<br><br>6. உள்ளகப் பாதுகாப்பைப் பேணுதல் | 1. இலங்கை தரைப்படை<br><br>2. இலங்கை கடற்படை<br><br>3. இலங்கை வான்படை<br><br>4. பொலிஸ் திணைகளம்<br><br>5. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்<br><br>6. ஆட்பதிவுத் திணைக்களம்<br><br>7. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br><br>8. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br><br>9. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி<br><br>10. ரணவிரு சேவை அதிகாரசபை<br><br>11. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை<br><br>12. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை<br><br>13. அரசசார்பற்ற அமைப்பாண்மைகளுக்கான செயலகம்<br><br>14. தேசிய பயிலிளவல் சிறப்பணி<br><br>15. தேசிய பாதுகாப்பு நிதியம்<br><br>16. அரச இரகசிய புலனாய்வுத் தகவல் சேவை<br><br>17. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br><br>18. லங்கா லொஜிஸ்ரிக்ஸ் லிமிட்டெட்<br><br>19. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டெட் | * வான்படைச் சட்டம்<br><br>* தரைப்படைச் சட்டம்<br><br>* கடற்படைச் சட்டம்<br><br>* பொலிஸ் கட்டளைச் சட்டம்<br><br>* (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவருவோர், குடியகல்வோர் சட்டம்<br><br>* (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவு செய்தல் சட்டம்<br><br>* (2008 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க) அப்பிவெனுவென் அப்பி நிதியச் சட்டம்<br><br>* (2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்<br><br>* (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) பிரசாவுரிமைச் சட்டம்<br><br>* (2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்<br><br>* (2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்<br><br>* (2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) கரையோரக் காப்புத் திணைக்களச் சட்டம்<br><br>* (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களில் தங்கிவாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும் ) சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br><br>கடமைகளும்<br>பணிகளும் | நிரல் II<br><br>திணைக்களங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br><br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய<br>சட்டங்கள் |
|---|---|---|
| 7. அரசாங்க, உள்ளகப் பாதுகாப்பு தொடர்பிலான புலனாய்வுச் சேவைகள்<br><br>8. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல்<br><br>9. மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கட்டுப்பாடு<br><br>10. ஆட்களை பதிவு செய்தல்<br><br>11. குடிவரவு, குடியகல்வு அலுவல்கள்<br><br>12. நேசநாட்டுப் படைகளுடனான உறவுகள்<br><br>13. முதுவர் போர்வீரர்கள், ஊனமுற்ற படைவீரர் தொடர்பான அலுவல்கள்<br><br>14. வெடிமருந்துகளும் சுடுபடைக் கலன்களும்<br><br>15. வெளிச்ச வீடுகளின் பராமரிப்பு (துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான வெளிச்ச வீடுகள் தவிர்ந்த)<br><br>16. பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கு பாதுகாப்புக் கல்வியும் பின்னைய சேவைக் கல்வியும் பெற்றுக் கொடுத்தல்<br><br>17. பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்கான உயர்கல்வி<br><br>18. தனியார் பாதுகாப்புச் சேவைகள் தொடர்பிலான அலுவல்கள்<br><br>19. இலங்கை பிரசாவுரிமை மற்றும் பிறநாட்டுக் குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்<br><br>20. அபாயகர ஔடதங்களின் பாவனையின் தடுப்பும் கட்டுப்பாடும். | | * (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிப்பொருட்கள் கட்டளைச் சட்டம்<br><br>* (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்<br><br>* (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் கட்டளைச் சட்டம்<br><br>* துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்<br><br>* இந்தியவம்சாவளியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டம்<br><br>* (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br><br>* நாடற்ற ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் சட்டம் (1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)<br><br>* (1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) மனிதவலு பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்பு படையினரைத் திரட்டுதல் சட்டம்<br><br>* தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம் (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க)<br><br>* (1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*கடமைகளும்*<br>*பணிகளும்* | *நிரல் II*<br><br>*திணைக்களங்களும்*<br>*நியதிச்சட்ட நிறுவனங்களும்*<br>*அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br><br>*நடைமுறைப்படுத்தப்படவேண்டிய*<br>*சட்டங்கள்* |
|---|---|---|
| 21. மீட்பு நடவடிக்கைகளும் கரை யோரப் பாதுகாப்புச் சேவைகளின் நிர்வாகமும்<br><br>22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்<br><br>23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களை கண்காணித்தல் | | * (2001 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம்<br><br>* (1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்<br><br>* (1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தனியார் பாதுகாப்பு முகவர் நிலையங்கள் சட்டம்<br><br>* பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br><br>* (1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவை அதிகார சபைச் சட்டம்<br><br>* (1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமிச் சட்டம்<br><br>* (1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம்<br><br>* 2000 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, கடல்சார் கடற் செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம்<br><br>* தன்னிச்சையான சமூகசேவை அமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டம்<br><br>* தற்போது வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*2. நிதி, திட்டமிடல் அமைச்சர்*

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. நிதி, திட்டமிடல், பொருளாதார மறுசீரமைப்பு, வரியிடல் ஆகியன தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br><br>2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும்பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால எல்லையினுள்ளும் வரவு செலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்திட்டங்களும் செயற்படுத்தப்படுவதை செயலாட்சி செய்தல்<br><br>3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட சகல பொதுச் சேவைகளையும் வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்குதல்<br><br>4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி அமைச்சின் செயற்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தத் தேவையான நவீன முகாமைத்துவ நுட்பமுறைகளையும் தொழில்நுட்பத்தையும் கையாண்டு வினைத்திறனுடன் பணியாற்றும் பொருட்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல்<br><br>5. தேசிய பொருளாதார, நிதிக் கொள்கைகளையும் உபாய முறைகளையும் வகுத்தமைத்தல்<br><br>6. அரசிறை மற்றும் பேரண்ட அரசிறைக் கொள்கை முகாமையை வகுத்தமைத்தல் | 1. பொதுத் திறைசேரி<br><br>2. தேசிய திட்டமிடல் திணைக்களம்<br><br>3. அரசிறைக் கொள்கைத் திணைக்களம்<br><br>4. வெளிநாட்டு வளமூலங்கள் திணைக்களம்<br><br>5. தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்<br><br>6. பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்<br><br>7. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்<br><br>8. அபிவிருத்தி நிதித் திணைக்களம்<br><br>9. வர்த்தக முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்<br><br>10. அரச நிதித் திணைக்களம்<br><br>11. சட்ட அலுவல்கள் திணைக்களம்<br><br>12. உள்நாட்டு அரசிறைத் திணைக்களம்<br><br>13. இலங்கைச் சுங்கத் திணைக்களம்<br><br>14. மதுவரித் திணைக்களம்<br><br>15. இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்<br><br>16. திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களம்<br><br>17. அரச கணக்குகள் திணைக்களம்<br><br>18. மதிப்பீட்டுத் திணைக்களம்<br><br>19. தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் | * ஒதுக்கீட்டுச் சட்டங்கள்<br><br>* (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வங்கித்தொழிற் சட்டம்<br><br>* (1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பந்தயம் பிடித்தல் மற்றும் சூதாட்ட வரி அறவீட்டுச் சட்டம்<br><br>* குடிசனமதிப்பீட்டுச் சட்டம்<br><br>* (1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) இலங்கை கடன்வழங்கு தகவல் பணியகச் சட்டம்<br><br>* சுங்கக் கட்டளைச் சட்டம்<br><br>* (2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) பற்றுக்கள் மீதான வரிச் சட்டம்<br><br>* (1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) அபிவிருத்தி லொத்தர்கள் சபைச் சட்டம்<br><br>* பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டம்<br><br>* ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)<br><br>* (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br><br>* செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்<br><br>* (1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br><br>* (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டம்<br><br>* நிதிக் கம்பெனிகள் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br><br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br><br>*நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 7. தேசிய அபிவிருத்தி, அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தல் | 20. கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம் | * (2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க) நிதிக் குத்தகை வரிச் சட்டம் |
| 8. வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தலும் நிதி வளங்களின் முகாமையும் | 21. கருத்திட்ட முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களம் | * (2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடுதல் சட்டம் |
| 9. தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் செயற்படுத்துகையும் வரவு செலவு நிதிக் கட்டுப்பாட்டின் வினைப்படுத்துகையும் | 22. தேசிய நடவடிக்கைக் கூடம் | * (2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) அரச நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள் ) சட்டம் |
| 10. தேசிய வரிக் கொள்கையின் முகாமையும் அரச வருவாயின் வினைத்திறனான பயன்பாடும் | 23. இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் மேற்பார்வைச் சபை | * வெளிநாட்டுக் கடன்கள் சட்டம் (1957 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) |
| 11. மத்திய வங்கியுடன் ஒருங்கிணைந்து நிதிக் கொள்கையை வகுத்தமைத்தலும் பேரண்டப் பொருளாதார முகாமையும் | 24. மிலோதா நிறுவனம் | * (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) இறக்குமதி, ஏற்றுமதிச் சட்டம் |
| 12. பொருளாதார அபிவிருத்திக்கான அரச, தனியார்துறை செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு | 25. இலங்கை மத்திய வங்கி | * (2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) உண்ணாட்டரசிறைச் சட்டம் |
| 13. சர்வதேச முகவராண்மைகளுடனான ஒருங்கிணைப்பும் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு வளங்களை ஈடுபடுத்தலும் | 26. இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு | * லோகோர் சீமாட்சி நிதியச் சட்டம் |
| 14. கொடைவழங்கும் அமைப்பாண்மைகளுடனும் சர்வதேச நிதி நிறுவனங்களுடனுமான ஒருங்கிணைப்பு | 27. இலங்கை காப்புறுதிச் சபை | * உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் |
| 15. அரச நிதி ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்துகை | 28. இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு | * பணச் சட்டம் |
| 16. திரட்டிய நிதியத்தின் முகாமை | 29. கடன் தகவல் பணியகம் | * நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டம் |
| 17. வருமான முகவராண்மைகளின் முழுதும் அளாவிய மேற்பார்வை | 30. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | * (2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் |
| 18. அரச வங்களினதும் நிதி முகவராண்மைகளினதும் பொதுவான நிர்வாகமும் செயற்பாட்டு அலுவல்களும் | 31. தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | * (1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் |
| 19. பொது செலவின முகாமை | 32. தேசிய அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | * (2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டம் |
| | 33. தேசிய லொத்தர் சபை | * பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டம் (2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) |
| | 34. அபிவிருத்தி லொத்தர் சபை | |
| | 35. சகல அரச வங்கிகளும் அவற்றின் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | |
| | 36. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் அதன் துணைக் கம்பனிகளும் இணைக் கம்பனிகளும் | |
| | 37. கமத்தொழில், கமநல சேவைகள் காப்புறுதிச் சபை | |
| | 38. இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br><br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br><br>*நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 20. பதவியணி முகாமையும் சம்பளங்களைத் தீர்மானித்தல் பற்றிய மதியுரைச் சேவைகளும் | 39. கொள்கை கற்கைகள் நிறுவனம் | * இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் (2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) |
| 21. அரசாங்கத்தின் கொள்வனவுகள் தொடர்பிலான மதியுரைச் சேவைகள் | 40. லோகோர் சீமாட்டி நிதியம் | * வங்கிகளினால் வழங்கப்படும் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க) |
| 22. திணைக்கள, பிற பொது நிதியங்களின் மேற்பார்வை | 41. சமூகப் பாதுகாப்புச் சபை | * (2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க) காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டம் |
| 23. அரச கணக்குகள் குழுவின் அறிக்கைகள் மீதான திறைசேரிக் குறிப்புகள் | 42. பணிநிறுத்தம், கலகம், சிவில் கிளிர்ச்சி, பயங்கரவாதம் பற்றிய நிதியம் | * (1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம் |
| 24. திணைக்களங்களின் முகாமைத்துவக் கணக்காய்வை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டுரைகளை ஆக்குதல் | 43. உள்ளூர்க் கடன்கள், அபிவிருத்தி நிதியம் | * (1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சமூக பாதுகாப்பு சபைச் சட்டம் |
| 25. காப்புறுதி அலுவல்களின் நிர்வாகம் | 44. கிராமிய புத்துயிரூட்டல் நிதியம் | * இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் (1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |
| 26. இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவை என்பவற்றின் நிர்வாகமும் ஆளணி முகாமைப் பணிகளும் | 45. கிராமியப் பொருளாதார புத்துயிரூட்டல் நிதியம் (நிதி) | * இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1978 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) |
| 27. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகளில் நிதி நிர்வாகம் | 46. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்) | * முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 28. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள ஹோட்டல் டிவலப்ஸ் (லங்கா) லிமிட்டெட் (PQ 143) இற்குப் புத்துயிரளித்தல் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஆற்றப்படும் செயற்பாடுகளை நெறிப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் | 47. ஹோட்டல் டிவலப்ஸ் (லங்கா) பி.எல்.சி. லிமிட்டெட் (PQ 143) | * முத்திரைத் தீர்வைச் சட்டம் |
| 29. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும் | 48. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | * (1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டம் |
| | | * (2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க) பெறுமதிசேர் வரிச் சட்டம் |
| | | * (2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சேமநல நன்மைகள் சட்டம் |
| | | * நிதிச் சட்டம் (1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br><br>கடமைகளும்<br>பணிகளும் | நிரல் II<br><br>திணைக்களங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br><br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய<br>சட்டங்கள் |
|---|---|---|
| 30. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | * சுற்றாடல் பாதுகாப்பு வரிச் சட்டம் (2008 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)<br><br>* கீழுழைப்பு செயற்பாட்டு தொழில் முயற்சிகள் அல்லது கீழுழைப்பு உபயோக சொத்துக்கள் முன்னேற்றச் சட்டம் (2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)<br><br>* இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவனச் சட்டம் (1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க)<br><br>* தற்போது வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

3. வெகுசன ஊடக, தகவல் அமைச்சர்

| நிரல் I<br><br>கடமைகளும்<br>பணிகளும் | நிரல் II<br><br>திணைக்களங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும் | நிரல் III<br><br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய<br>சட்டங்கள் |
|---|---|---|
| 1. வெகுசன ஊடக, தகவல் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழ்வரும் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br><br>2. குறித்த நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் | 1. தகவல் திணைக்களம்<br><br>2. அரசாங்க அச்சகத் திணைக்களம்<br><br>3. இலங்கை பத்திரிகைப் பேரவை<br><br>4. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br><br>5. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | * அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1973 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க)<br><br>* இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் (1966 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க)<br><br>* செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br><br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br><br>*நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| அதிகாரிகளுடன் உடன்பட்ட கால எல்லையினுள்ளும் வரவு, செலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்திட்டங்களும் செயற்படுத்தப்படுவதை செயலாட்சி செய்தல்<br><br>3. அமைச்சின் நோக்கெல்லைக்குட்பட்ட சகல பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்கு தல்<br><br>4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி அமைச்சின் செயற் பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தத் தேவையான நவீன முகாமைத்துவ நுட்பமுறைகளையும் தொழில்நுட்பத்தையும் கையாண்டு வினைத்திறனுடன் பணியாற்றும் பொருட்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல்<br><br>5. செய்தி கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் உட்பட வெகுசன ஊடகங்களுக்கு உத்தியோகபூர்வ செய்திகளை வழங்குதல்<br><br>6. தனிப்பட்ட ரீதியிலான விசாரணைகளை செவிமடுப்பது உட்பட கிரமான ஒழுங்குமுறையாக இலங்கை பற்றிய அடிப்படைத் தகவல்களை வழங்குதல்<br><br>7. அரசாங்கத் திணைக்களங்களுக்கு தகவல் வழங்குதலும் பிரசார நடவடிக்கைகளும்<br><br>8. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரப் பொருட்களையும் வழங்குதல்<br><br>9. வெளியீடுகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் | 6. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு<br><br>7. அரச அச்சுக் கூட்டுத்தாபனம்<br><br>8. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி<br><br>9 வரையறுக்கப்பட்ட லங்கா பத்திரிகை நிறுவனம்<br><br>10. செலசினே தொலைக்காட்சி நிறுவகம்<br><br>11. கிரியேடிவ் ஹெலன்கா லிமிட்டெட்<br><br>12. தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனம்<br><br>13. இலங்கை தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவகம்<br><br>14. மஹிந்த ராஜபக்ச தேசிய ரெலிசினிமா பூங்கா (ரன்மிஹி தென்ன) | * இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க)<br><br>* இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் (1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)<br><br>* இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க)<br><br>* அரச திரைப்பட கூட்டுத்தாபனச் சட்டம் (1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)<br><br>* அரச அச்சிடுதற் கூட்டுத்தாபனச் சட்டம் (1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க)<br><br>* தற்போது வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I*<br><br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br><br>*திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br><br>*நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 10. திணைக்கள வெளியீடுகள் தவிர்ந்த அரசாங்க வெளியீடுகளின் விற்பனை, களஞ்சியப்படுத்தல் மற்றும் அனுப்புகை<br><br>11. செய்தித் திரைப்படங்களையும் ஆவணத் திரைப்படங்களையும் தயாரித்தலும் காட்சிக்குவிடலும்<br><br>12. வர்த்தக தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பும் வெளிநாட்டு ஒலிபரப்புகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகளும்<br><br>13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களும்<br><br>14. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தலும் | | |